இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 13-05-2025

# உச்சநீதிமன்றத்தின் நெற்றியடி!

**“பி.எம்.ஸ்ரீ. திட்டத்தில் கையெழுத்துப் போடுங்கள் என்று தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட முடியாது” என்று உச்சநீதிமன்றம் நெற்றியடி தீர்ப்பை வழங்கி இருக்கிறது.**

பா.ஜ.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி என்பவர் உச்சநீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கை தாக்கல் செய்திருந்தார். “நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக ஒன்றிய அரசு தேசியக் கல்விக் கொள்கையை உருவாக்கி இருக்கிறது. அந்தத் திட்டத்தின் கீழ் இந்தியா முழுமைக்கும் 14 ஆயிரம் பள்ளிகளை மேம்படுத்தப் போகிறார்கள். இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்கள் இணையவில்லை. அவர்கள் ஒன்றிய அரசின் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட மறுக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையானது தமிழ் மொழிக்கும், தமிழர் நலனுக்கும் எதிரானது என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது உண்மைக்கு மாறானது. அரசியல் உள்நோக்கம் கொண்டது. எனவே, தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களையும் இத்திட்டத்தில் கையெழுத்துப் போட உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும்” என்று அந்த மனுவில் கேட்டிருந்தார் பா.ஜ.க. வழக்கறிஞர்.

இந்த வழக்கானது உச்சநீதிமன்ற நீதிபதிகள் பார்த்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு முன்னால் விசாரணைக்கு வந்தது. வழக்குத் தொடுத்திருப்பவரை யார் என்று நீதிபதிகள் கேட்டார்கள். ‘நான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன்’ என்றும், ‘டெல்லியில் வசிக்கிறேன்’ என்றும் அவர் சொன்னார். “டெல்லியில் தானே வசிக்கிறீர்கள், உங்களுக்கு இந்தி கற்றுக் கொள்ள எந்தத் தடையும் இல்லையே, டெல்லியில் இருந்து இந்தியை தாராளமாகக் கற்றுக் கொள்ளுங்கள்” என்று நீதிபதிகள் அறிவுரை சொன்னார்கள்.

**“மாநிலங்கள், தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பது மிகவும் சிக்கலான விவகாரம் ஆகும். நாட்டு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நிலைநாட்ட முடியும். ஆனால், தேசியக் கல்விக் கொள்கை போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாநிலங்களைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டால் அதில் உச்சநீதிமன்றம் தலையிட முடியும். எனவே உங்கள் மனுவில் உள்ள கோரிக்கைகளை விசாரணை நடத்த விரும்பவில்லை”** என்று சொல்லி பா.ஜ.க. வழக்கறிஞர் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்துள்ளார்கள்.

தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துங்கள் என்று மாநிலங்களுக்கு உத்தரவிட முடியாது என்று சொன்னது மட்டுமல்ல; தேசியக் கல்விக் கொள்கையானது அடிப்படை உரிமைகளை பாதித்தால் அப்போது தலையிடுவதாகவும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

தேசியக் கல்விக் கொள்கையானது, மாநிலத்தின் அடிப்படை உரிமைகளை பாதிப்பதாகவே அமைந்துள்ளது. பி.எம்.ஸ்ரீ. திட்டத்தில் தமிழ்நாடு சேரவில்லை என்பதற்காக, பள்ளிக் கல்வியின் வேறொரு திட்டத்துக்காக வழங்க வேண்டிய ரூ.2000 கோடி பணத்தை நிறுத்தி வைத்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

பள்ளிக் கல்வித் துறைக்கு தரும் நிதியை, ‘மும்மொழித் திட்டத்தை ஏற்காவிட்டால் தர மாட்டோம்’ என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறினார். **“பி.எம்.ஸ்ரீ. திட்டத்தை ஏற்காததால் தமிழ்நாடு 2 ஆயிரம் கோடி ரூபாய் இழக்கிறது என்று சொல்லும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களே! தமிழ்நாட்டில் இருந்து நீங்கள் வாங்கிக் கொண்டு இருக்கும் வரியைத் தர மாட்டோம் என்று சொல்ல எங்களுக்கு ஒரு நொடி போதும்... மறந்துவிடாதீர்கள்”** என்று எச்சரிக்கை செய்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“இந்தத் திட்டத்தில் கையெழுத்துப் போட்டால்தான் இரண்டாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும்பத்தாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும் போட மாட்டோம். இரண்டாயிரம் கோடி பணத்துக்காக இன்று கையெழுத்துப் போட்டால் இரண்டாயிரம் ஆண்டு பின்னோக்கி இந்த தமிழ்ச் சமுதாயம் போய்விடும்.அந்தப் பாவத்தை இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் செய்ய மாட்டான்”** என்று சொன்னார். இந்தியாவில் இப்படி எந்த முதலமைச்சரும் பேசி இருக்க மாட்டார்கள். இப்படி பிளாக் மெயில் செய்யவே இதுபோன்ற திட்டங்களைப் பயன்படுத்துகிறது ஒன்றிய அரசு.

அவர்களுக்கு இந்தியைத் திணிக்க வேண்டும், சமஸ்கிருதத்தை புகுத்த வேண்டும். அதற்காகத்தான் தேசியக் கல்விக் கொள்கை, பி.எம்.ஸ்ரீ. பள்ளிகள் என்று பல்வேறு வித்தைகளைக் காட்டுகிறார்கள்.

‘புதிய கல்விக் கொள்கையானது தமிழுக்கும் தமிழர்க்கும் விரோதமானது என்று தமிழ்நாடு முதலமைச்சர் சொல்வது உண்மைக்கு மாறானது, அரசியல் உள் நோக்கம் கொண்டது’ என்று வழக்கு தாக்கல் செய்பவர் சொல்லி இருக்கிறார். உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசிய பேச்சை அந்த வழக்கறிஞர் படிக்க வேண்டும். “தேசியக் கல்விக் கொள்கையானது சமஸ்கிருதத்தை முக்கியத் தூணாகக் கொண்ட இந்திய அறிவு முறைக்கு வலுவான முக்கியத்துவம் அளிக்கிறது” என்று பேசி இருக்கிறார். இதை வைத்துத்தான் தமிழுக்கும், தமிழர்க்கும் எதிரானது தேசியக் கல்விக் கொள்கை என்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

முதலில் இந்தி, அதன்பிறகு சமஸ்கிருதம், இவைதான் ஆட்சி மொழி ஆக வேண்டும் என்று சொல்வது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கொள்கை. அதனைத்தான் தேசியக் கல்விக் கொள்கை மூலமாக அமல்படுத்தப் பார்க்கிறார்கள்.

**அதனால்தான், ‘இது கல்விக் கொள்கையல்ல, காவிக் கொள்கை’ என்கிறார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இதனை உச்சநீதிமன்றத்தின் மூலமாக நுழைக்கப் பார்த்தார்கள். அதுவும் நடக்கவில்லை.**




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.5.2025) சென்னை தரமணியில் செயல்பட்டு வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தமிழரசு இதழ் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மார்பளவுச் சிலையை திறந்து வைத்து, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள புகைப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில்

# 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடியில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் கே.என்.நேரு வழங்கினர்!

### இரா.ஆவுடையப்பன் – மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. – மேயர் கோ.ராமகிருஷ்ணன் பங்கேற்பு!

*நெல்லை, மே 13 -*

நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினர்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் நேற்று (12.05.2025) நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், தலைமையில், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர் கே.ஆர். ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

அதன்படி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 2 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளும், 216 பயனாளிகளுக்கு ரூ.3.86 கோடி மதிப்பிலான வரன்முறை படுத்தப்பட்ட வீட்டு மனை பட்டாக்களும், வேளாண்மைத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.3,014 மதிப்பிலான விதைகளும், கூட்டுறவுத்துறை சார்பில், 259 பயனாளிகளுக்கு ஆதரவற்ற விதவைகடன், சிறுகுறு தொழில் கடன், மகளிர் சுய உதவிக்குழு கடன் ஆகிய கடன்களும், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ.15.75 இலட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கர பொருத்தப்பட்ட இரு சக்கர வாகனங்களும், மாநகராட்சி சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1.14 கோடி மதிப்பிலான ஜே.சி.பி இயந்திரங் களும்,குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனம் சார்பில் பாய் நெசவு மற்றும் சேலை நெசவு தொழில்கள் செய்வதற்கு 5 பயனாளிகளுக்கு ரூ.3.20 இலட்சம் மதிப்பிலான கடன் உதவிகளும் என மொத்தம் 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

பின்னர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:-

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏழை,எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புறத்தில் நீண்ட நாட்களாக குடியிருப்பவர்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டுமென அரசாணை அறிவித்து அதனை செயல்படுத்தி வருகிறார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் அதாவது 20 ஆண்டுகளுக்கு முன்பாக சிறப்பு அனுமதி பெற்று திருச்சி மாவட்டத்தில் 1500 நபர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்று 20 ஆண்டுகள் கழித்து திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் இன்று பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கு முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டி நீண்ட காலமாக நகர்புறத்தில் இருக்கிற மக்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று ஒரு தனி தீர்மானம் போட்டு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி அரசாணையாக வெளியிட்டார்கள்.

அதன் பிரகாரம் இன்று நகர்ப்புறங்களில் நீண்ட காலம் வசிப்பவர்களுக்கு இரண்டு சென்ட் பட்டா வழங்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ரூபாய் 5.00 லட்சத்திற்கும் குறைவான மதிப்பு உள்ள நிலங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதி பெற்று பட்டா வழங்கலாம். ரூபாய் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மனைகளுக்கு சென்னையில் உள்ள வருவாய்த்துறை செயலாளரிடம் அனுமதி பெற்று வழங்கப்படும்.

நீண்ட நாட்களாக குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன்படி சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும் கண்டிப்பாக பட்டா வழங்கப்படும். கிராமப்புறங்களில் உள்ளவர் களுக்கு எந்த வித தடையும் இல்லாமல் பட்டா வழங்க உத்தரவிடப்பட்டு பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக 2 மாதத்திற்குள் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு 10 லட்சம் பட்டா வழங்க வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

முன்னதாக, பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர் கிராமம் ரெட்டியார்பட்டி பொருநை அருங்காட்சியகம் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை ஆகஸ்ட் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறப்பதற்கான பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து, பாளையங்கோட்டை சீனிவாசநகர் சரண்யா பூங்கா நகர் பகுதியில் பாதாளச் சாக்கடை திட்டம் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பாளையங்கோட்டை முருகன் குறிச்சி பகுதியில் நெடுஞ்சாலை துறையின் சார்பில் முருகன்குறிச்சி முதல் மகளிர் காவல் நிலையம் வரை 1.2 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலையினை 07 மீட்டர் அகலத்தில் இருந்து 10 மீட்டராக அகலப்படுத்தி மூன்று சிறு உயர்மட்ட பாலங்கள் அமைக்கும் பணிகள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். பணிகள் அனைத்தும் இந்த மாத இறுதியில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என துறை அலுவலர்களுக்கு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தினார்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மா. சுகன்யா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் முருகேசன்,

முன்னாள் அமைச்சர் மைதீன் கான், நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், ஞானதிரவியம், சித்திக், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, முன்னாள் மேயர் சரவணன்,

மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாயத் தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், ஒன்றியச் செயலாளர்கள் அருள்மணி, அன்பழகன்,

மாரியப்பன், ஜோசப் பெல்சி கழக நிர்வாகிகள் ஜான் ரபீந்தர், மகேஸ்வரி, அனிதா, பிரான்சிஸ், ஜூலியட், துபாய் சாகுல், அண்டன் செல்லத்துரை, மீரான்மைதீன், சாய்பாபா மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள், மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று நடத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல்வகாப், எம்.எல்.ஏ.மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையர் சுகபுத்ரா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெகதீஸ், துணை மேயர் ராஜ், முன்னாள் எம்.பி. ஞானதிரவியம் உள்பட பலர் உள்ளனர்.